DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | | **S.C.No.745/2017** |
| Depositions of Witness for | | Prosecution Pw4 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திருமதி.பரமேஸ்வரி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of April 2023.

(A1 to A3 present. A4, A5 absent. 317 of crpc petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை தாலுகாவில் உடையார்குளம், வாகைகுளம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 13.08.2015 ம் தேதி திம்மராஜபுரம் கிராம நிர்வாக அலுவலராக இருந்தபோது காலை 7 மணிக்கு தலையாரி பைப்பாஸ் ரோட்டில் பெட்ரோல் ஊற்றி இறந்த நிலையில் தலையில்லாமல் ஒரு உடல் கிடப்பதாகச் சொன்னார். நான் 7.30 மணிக்கு சென்று பார்த்தபோது கீழநத்தம் செல்லும் ரோட்டின் மேல்புறம் சர்வே எண்.101

முறிக்குளம் என்ற இடத்தில் உடல் கிடந்தது. நானும் தலையாரியும் சென்று பார்த்தோம். நான் சென்று பார்த்தபோது உடல் எரிந்த நிலையில் இருந்தது. அதன்பின்பு பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். அந்த உடல் ஆணின் உடல் ஆகும். நானும் தலையாரியும் புகார் கொடுக்க சென்றோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது நான் கொடுத்த புகார் தான். தலையாரி இதில் அறிவேன் சாட்சியாக கையெழுத்திட்டிருக்கிறார். அந்த புகார் **அ.சா.ஆ.2** ஆகும். அந்த இறந்த ஆண் உடலின் வயது சுமார் 40ல் இருந்து 45 இருக்கும். மாலை 6 மணிக்கு தலையாரி அன்றைய தினம் ஒரு தலை கக்கன்நகர் மேம்பாலத்தில் இருந்து 10 அடி தள்ளி கிடப்பதாக என்னிடம் கூறினார். 6.30 மணிக்கு நானும் தலையாரியும் சென்று பார்த்தோம். அந்த தலையில் பல் எதுவும் இல்லாமல் இருந்தது. இடது கண் ஓரத்தில் மட்டும் தோல் இருந்தது. மற்ற முகத்தின் பகுதிகள் எரிந்த நிலையில் இருந்தது. மீண்டும் அதே காவல் நிலையத்தில் நானும் தலையாரியும் சென்று புகார் கொடுத்தோம். அப்போது நான் கொடுத்த புகார் இது தான். அது அ.சா.ஆ.3 ஆகும். தலையாரி இதில் அறிவேன் சாட்சியாக கையெழுத்திட்டிருக்கிறார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் புகார் கொடுக்கும் காலகட்டத்தில் பாளையங்கோட்டை வி.எம்.சத்திரத்தில் குடியிருந்து வந்தேன். வி.எம்.சத்திரம் தனி கிராமம் ஆகும். வி.எம்.சத்திரம் திம்மராஜபுரம் கிராம எல்கைக்கு உட்பட்டது கிடையாது. என்னுடைய பணிகள் அனைத்து கிராம நிர்வாக அலுவலர் பணிப்பதிவேட்டில் கண்ட ஷரத்துக்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டதாகும். அந்த ஷரத்துக்களின் படி கிராம நிர்வாக அலுவலர் எந்த கிராமத்தில்பணியில் இருக்கிறாரோ அந்த கிராமத்தின் எல்கைக்குட்பட்ட பகுதியில் தான் குடியிருக்கவேண்டும் என்றால் சரிதான். தலையாரி என்னிடம் தகவல் வந்து கூறியபோது நான் வி.எம்.சத்திரத்தில் என்னுடைய வீட்டில் இருந்தேன். தலையாரிக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. 2 புகார்களும் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டது என்றால் சரிதான். முதல் புகாரை நான் தான் கைப்பட எழுதினேன். 2வது புகாரை நான் கைப்பட எழுதவில்லை. புகார் கொடுத்தபின்பு தலையில்லாத உடல் குறித்தும், எரிந்த தலை குறித்தும் போலீஸார்

என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. எரிந்துபோன தலையானது முழுவதுமாக எரிந்த நிலையில் அடையாளம் காண முடியாத வகையில் சிதைந்து காணப்பட்டது என்றால் சரிதான். 2 புகார்களும் காவல் நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் சொல்லச்சொல்ல எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் தலையாரி தலையில்லாத உடல் கிடப்பதாக சொன்னதும், எரிந்த நிலையில் தலை மட்டும் கிடப்பதாகச் சொன்னதும் அதன் அடிப்படையில் நான் காவல் நிலையம்சென்று 2 புகார்களையும் கொடுத்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றும், இவ்வழக்கிற்காக இவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு விதிக்கப்பட்ட பணிபதிவேட்டில் கண்ட ஷரத்துக்களின் அடிப்படையில் வேலை செய்யும் கிராமத்தின் கிராம எல்கைக்கு உட்பட்டு குடியிருக்காமல் இருந்தது சட்டப்படி குற்றம் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.04.21 17:45:19 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw5 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.வேம்பன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of April 2023.

(A1 to A3 present. A4, A5 absent. 317 of crpc petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் தற்போது திம்மராஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தலையாரியாக இருந்து ஓய்வு பெற்றிருக்கிறேன். தலையாரியாக திம்மராஜபுரத்தில் 2017 ல் ஓய்வு பெறும் வரை பணிபுரிந்தேன். 13.08.2015 ல் காலை 7 மணிக்கு பாளையங்கோட்டை தாலுகா கீழநத்தம் கிராமம் போகும் வழியில் முறிக்குளம் என்ற இடம் உள்ளது. அங்கு சென்றபோது தலையில்லாமல் எரிக்கப்பட்ட உடல் குப்புற நிலையில் கிடந்தது. அது ஆண் உடல் ஆகும். ஆண் உடலின் வயது சுமார் 40 ல் இருந்து 45 இருக்கும்.

உடனடியாக கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று நான் தகவல் கூறினேன். நானும் கிராம நிர்வாக அலுவலரும் வந்து சம்பவ இடத்தைப் பார்த்தோம். பின்பு பாளையங்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனு எழுதி நான் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.2 புகாரில் உள்ள அறிவேன் சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையதாகும். காவல் நிலையத்தில் இருந்து போலீஸார் வந்து உடலை ஹைகிரவுண்டு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். அன்றைய தினம் மாலை 6, 6.30 மணிக்கு பைப்பாஸில் திம்மராஜபுரத்தில் இருந்து தூத்துக்குடி செல்லும் ரோட்டின் மேற்கே 10 அடி தள்ளி எரிந்த நிலையில் ஒரு மண்டை ஓடு கிடப்பதாக ஆடு, மாடு மேய்க்கும் நபர்கள் சொன்னார்கள். நான் சென்று பார்த்தபோது மண்டைஓடு கிடந்தது. நான் வி.ஏ.ஓ–விடம் போன் செய்து தகவல் கூறினேன். கிராம நிர்வாக அலுவலரும் மண்டை ஓடு இருக்கும் இடத்திற்கு உடனே வந்துவிட்டார். பின்பு மீண்டும் நாங்கள் பாளையங்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்று இவ்வாறு மண்டைஓடு கிடக்கிறது என்று கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்தார். அ.சா.ஆ.3 அவர் கொடுத்த புகார் தான். அதில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்திட்டிருக்கிறேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இறந்த உடல் கிடந்த இடம் திம்மராஜபுரம் கிராமமாகும். எனக்கு ஊர்க்காரர்கள் தகவல் சொன்னார்கள். யார் என்று குறிப்பிட்டு பெயர் சொல்லமுடியாது. இந்த 2 புகார்களிலும் என்னென்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். தலையில்லாத உடல் சம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகாரில் அந்த உடல் சம்பந்தப்பட்ட அங்கஅடையாளங்கள் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல. அந்த உடலில் துணி இல்லாமல் நிர்வாணமாகத்தான் இருந்தது. புகாரில் அந்த உடலில் துணி இல்லாமல் நிர்வாணமாகத்தான் இருந்தது என்று கூறவில்லை என்றால் சரிதான். தலை மட்டும் கிடக்கிறது என்ற விபரத்தை ஆடு, மாடு மேய்ப்பவர்கள் சொன்னார்கள். யார் என்று பெயர் குறிப்பிட்டு கூற முடியாது. தலைமட்டும் இருந்ததற்கு கொடுக்கப்பட்ட புகாரில் அந்த தலையை அடையாளம் காண்பதற்கான அங்கஅடையாளங்கள் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.3 புகார் காவல் நிலையத்தில் போலீஸார் எழுதினார்கள். எரிந்த நிலையில் இருந்த தலையில்லாத உடலும், தலைமட்டும்

கிடைத்த இடமும் திம்மராஜபுரம் கிராம நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதி இல்லை என்றால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலரிடம் தகவல் கூறி காவல் நிலையத்திற்கு சென்ற பின்பு வட்டாட்சியரிடம் இது குறித்து தகவல் கூறவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் யாரோ தகவல் கூறி எரிந்த நிலையில் இருந்த உடலும் எரிந்த நிலையில் இருந்த தலையும் கண்டதாகவும் அதை கிராம நிர்வாக அலுவலரிடம் கூறியதாகவும், நாங்கள் இருவரும் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தது பொய் என்றும், காவல் நிலையத்தில் வைத்து போலீஸார் தயார் செய்து வைத்திருந்ததில் நாங்கள் கையெழுத்திட்டிருக்கிறோம் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.04.21 17:45:29 +0530